**நீர் சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்தை வலுப்படுத்தல் செயற்திட்டம் -2017**

---

நீர் சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்தை வலுப்படுத்தல் செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சார்க் அபிவிருத்தி நிதியத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2014 திசெம்பர் 17 ஆந் திகதியிடப்பட்ட செயற்திட்ட நிதியளித்தல் உடன்படிக்கையின் 3.3 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்புரையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தல், குறிக்கோள்கள், நிதியளிப்பு காலப்பகுதி என்பன.**

---

செயற்திட்டத்தின் நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம் விவசாய அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் கமநல அபிவிருத்தி திணைக்களம் அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. மட்டக்களப்பு மற்றும் மொனறாகலை மாவட்டங்களிலுள்ள தங்களது நீர் மற்றும் மண்ணியல் தேவைகளுக்காக கிராமிய நீர்ப்பாசன முறைமையில் தங்கியிருக்கும் கிராமிய சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தின் நிரந்தர மேம்பாட்டினையும் 2800 குடும்பங்கள் நலன்பெறுகின்ற 09 கிராமங்களிலுள்ள நீர்ப்பாசன திட்டங்கள் மற்றும் நீர் மூல மேட்டு நிலங்களின் நீர் பாவனை செயற்திறனை மேம்படுத்துதலையும் உறுதிப்படுத்துதல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். நிதியளித்தல் உடன்படிக்கையின் படி செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 119 மில்லியனுக்குச் சமனான யுஎஸ் டொலர் 0.94 மில்லியனாகும். முழுப் பணமும் சார்க் அபிவிருத்தி நிதியத்தால் வழங்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. செயற்திட்டம் தனது நடவடிக்கைகளை 2014 திசெம்பர் 17 இல் ஆரம்பித்ததுடன் 2017 திசெம்பர் 16 அளவில் பூர்த்திசெய்வதற்குப் பட்டியல்படுத்தப்பட்டிருந்தது. பின்னர் செயற்திட்ட காலம் 2018 திசெம்பர் 16 வரையும் நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான

தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் நன்கொடை முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(இ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 திகதியிடப்பட்ட MOFP/ERD/2007/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களானவை நிதி ஆண்டு முடிவடைந்த பின்னர் 03 மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுக்கின்றது. எனினும் செயற்திட்டத்தின் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 நவம்பர் 16 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளித்தல் மற்றும் பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதும் 2017 திசெம்பர் 31 வரையும் நிதிகளை பயன்படுத்துவது தொடர்பான குறித்த சில முக்கிய புள்ளி விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| நிதி மூலம் | நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | யு.எஸ்.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | யு.எஸ்.டொலர் மில்லியன் | யு.எஸ்.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | யு.எஸ்.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| சார்க் அபிவிருத்தி நிதியம் | 0.94 | 141 | 86 | 0.40 | 59.90 | 0.67 | 101.61 |
| | 0.94 | 141 | 86 | 0.40 | 59.90 | 0.67 | 101.61 |

### 3.2 பௌதீக செயலாற்றல்

வேலைத்திட்டங்களின் பிரகாரம் மட்டக்களப்பு மற்றும் மொனராகலை மாவட்டங்களிலுள்ள 09 கிராமங்களில் தேகாரோக்கிய மற்றும் சுகாதார வசதிகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு ஆறுகளின் மூலப் பிரதேச முகாமைத்துவத்தை வலுப்படுத்துதல், காணிகளின் பயன்பாட்டைத் திட்டமிடுதல், நீர் மூலம் பரவுகின்ற வியாதிகளைக் குறைத்தல், முன்னேற்றகரமான தொழில் நுட்பங்களை கடைப்பிடித்தல் மற்றும் சுகாதார நிலைமைகளை உறுதிப்படுத்துவதற்கு விழிப்புனர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் முதலியவாறான மேம்பாட்டு வேலைகளை

செயற்திட்டத்தினால் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. ஆகவே மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாகரை,தொப்பிகல, களுவாஞ்சிக்குடி, மற்றும் மொனராகலை மாவட்டத்திலுள்ள செல்லக் கதிர்காமம், ககுருல்லன் பெலஸ்ஸ, கிம்புல்கெம, கந்த சுரிந்துகம ஆகிய ஏழு கிராமங்கள் அந்த நோக்கத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டிருந்தன. அவற்றில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மாவட்டுவான், ஆடன்குளம், குளங்களின் புனரமைப்பு வேலைகளும் தாத்தாதீவிலுள்ள அணை நிர்மாணமும் முன்னைய ஆண்டின் இறுதியில் பூர்ததிசெய்யப்பட்டிருந்தன. மேலும், முறையே 2017 நவம்பர் 17 ஆந் திகதியும் 2016 செப்தெம்பர் 08 ஆந் திகதியும் பூர்த்தி செய்வதற்குப் பட்டியற்படுத்தப்பட்ட மொனராகலை மாவட்டத்திலுள்ள கிறிகடுவ குளம் மற்றும் குமுல்காட்டுவ குளத்தின் புனரமைப்பு வேலைகள் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. எனினும், மீளாய்வாண்டின் போது மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பொருத்தமான குழுக்கள் பற்றிய பயிற்சி, சுகாதார வசிதிகளை நிர்மாணித்தலும், நவீனமயப்படுத்தலும், சமூக கலாச்சார நடைமுறைகள் மீதான ஆய்வுகளை மேற்கொள்ளல், நன்னடத்தை மாற்றங்களுக்கான தகவல், கல்வி தொடர்பாடல் பொருட்களை அபிவிருத்தி செய்தல் முதலிய நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மொனராகலை மாவடடத்திலுள்ள இன்டிபலஸ்ஸ குளத்தின் புனரமைப்பு வேலைகளுக்கான ஒப்பந்தமானது ரூபா 11.51 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2017 சனவரி 19 ஆந் திகதி 02 விவசாயிகள் அமைப்புக்களுக்கு அவ்வாறான புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்கு அந்த அமைப்புக்களின் தொழில்நுட்ப மற்றும் நிதி இயலுமைகளை கவனத்தில் கொள்ளாது வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தக்காரரின் நிதி இயலுமையின்மை காரணமாக குளத்தின் புனரமைப்பு வேலையின் ஒரு பகுதி 2017 யூலை மாதத்தில் கைவிடப்பட்டிருந்தது. மேலும், குளத்து அணைக்கட்டின் 450 மீற்றர்களின் புனரமைப்பு வேைலகள் வன பரிபாலன திணைக்களத்தின் எதிர்பார்ப்புக்களின் காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, 200 ஏக்கர் வயல் நிலங்களுக்கு தொடர்ச்சியாக நீர் வசதிகளை வழங்குவதற்காக குளத்தை புனரமைப்பு செய்யும் வேலைகளின் குறிக்கோள்கள் எதிர்பார்க்கப்பட்டவாறு அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மொனராகலையில் ரூபா 1.91 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டு ரூபா 1.06 மில்லியன் பெறுமதியான தேவையான உபகரணங்களுடன் 2017 நவம்பர் 07 ஆந் திகதி கமநல அபிவிருத்தி திணைத்திற்கு கையளிக்கப்பட்ட மண் பரிசோதனை ஆய்வுகூடமானது மண் பரிசோதனை செய்வதில் அறிவுள்ள உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதிலுள்ள தாமதத்தின் காரணமாக 2018 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையும் விளைவற்றுக் காணப்பட்டது.